## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருச்செங்கோடு

முன்னிலை: திருமதி.ஆ.சரண்யா M.A., L.L.M., M.Phil.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருச்செங்கோடு.

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ம் நாள், திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.167/2016**

CNR.No.TNNM070000189 2016

1. ராஜம்மாள்
2. புவனேஷ்வரன்
3. மகேஷ்குமார் ...வாதிகள்

**/ எதிராக/**

1. ராஜவேல்
2. கண்காணிப்பு பொறியாளர் (கட்டுமானம் & பராமரிப்பு)
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   நாமக்கல்
3. நிர்வாக பொறியாளர் (கட்டுமானம் & பராமரிப்பு)
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   திருச்செங்கோடு
4. உதவி பொறியாளர் (கட்டுமானம் & பராமரிப்பு)
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   எளச்சிபாளையம்
5. உதவி கணக்கு அலுவலர், வருவாய் கிளை
   தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
   திருச்செங்கோடு ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு என் முன்பாக இறுதி விசாரணைக்கு 15.02.2023 ல் வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கைலாசநாதன், அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதியை பொறுத்து தோன்றா தரப்பினராகவும் உள்ளனர். வழக்குரை, எதிர்வழக்குரை, மற்றும் இருதரப்பு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு முதல் அயிட்ட மின் இணைப்பு L.R.No.AAO/RD/TVL.F Name Transfer / D.No.189/2013–2014, நாள் 11.11.2013 உத்திரவு செல்லாதது இல்லாநிலையது சட்டப்படியானதல்ல என விளம்புகை செய்தும் பழையபடிக்கே சின்னாகவுண்டர் பெயருக்கு மாற்றம் செய்யப்படவேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1–ம் பிரதிவாதி வழக்கு முதல் அயிட்ட சொத்து மின் இணைப்பு மூலம் கிளாப்பாளையம் கிராமம், புல எண்.22/3ல் உள்ள ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் எடுக்க உபயோகப்படுத்தக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு 2–வது அயிட்ட சொத்து வண்டிப்பாதை உரிமை வாதிகளுக்குரியது என விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்கு வண்டிப்பாதை 2–வது அயிட்ட சொத்தில் வாதிகளின் விவசாய நிலம் குடியிருப்பு வீடுகளுக்கு ஆள், ஆடு, மாடுகள் வண்டி வாகனம் டிராக்டர் லாரி போன்றவைகள் எடுத்து செல்வதையும், வந்து போவதையும், 1–ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–

1.1) 1–ம் வாதியின் மகன்கள் 2, 3 வாதிகள் ஆவர். 1–ம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் தகப்பனார் சண்முகம் ஆவர். தாவா முதல் அயிட்ட சொத்தானது கிளாப்பாளையம் கிராமம் புல எண்.20/2 இதில் 4 செண்டில் உள்ள கிணறு நிலம், கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் 9, மின்மோட்டார் பம்பு செட் ஆகும். இதில் வாதிகள் மற்றும் 1–ம் பிரதிவாதிக்கு 1/2 பாகம் பாத்தியம் ஆகும். தாவா 2–ம் அயிட்ட சொத்து 1–ம் பிரதிவாதி நிலத்தில் செல்லும் வண்டித்தடம் வாதிகளுக்கு வசதியுரிமை அடிப்படையில் பாத்தியப்பட்டதாகும். தாவா முதல் அயிட்ட சொத்துக்கள் 1–ம் வாதியின் மாமனார் முத்துசாமி, வாதியின் கணவர் சண்முகம் மற்றும் அவர் சகோதரர்

ராஜவேல் மற்றும் ஒரு சின்னாகவுண்டருக்கும் இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி சரிபாதி பாத்தியம் ஆகும். அதன் பின்னிட்டு 1–ம் வாதியின் மாமனார் மற்றும் ராஜவேல் கடந்த 23.02.2004 ம் தேதி அவர்களின் அனைத்து உரிமைகளையும் விடுதலை செய்து கொடுத்து விட்டனர். அதன் பின்னிட்டு 1–ம் வாதியின் மாமியார் பாவாயி கடந்த 10.02.2015 ம் தேதி விடுதலை ஆவணப்படி வாதிகளுக்கு எழுதிக்கொடுத்துவிட்டார்.

1.2) மேற்படி 1, 2 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்குள்ள உரிமையை தெரிந்து கொண்டு, 1ம் பிரதிவாதி, 2 முதல் 5 பிரதிவாதிகளின் உதவியுடன், தாவா 1–ம் அயிட்ட சொத்தில் உள்ள கிணற்றுக்கு 1–ம் பிரதிவாதி பெயரில் மின் இணைப்பை மாற்றிக் கொண்டுள்ளதாக வாதிகளுக்கு தெரிய வந்து, கடந்த 25.03.2016–ல் மனு செய்துள்ளார். அதற்கு கடந்த 23.06.2016–ம் தேதி 2 முதல் 5 பிரதிவாதிகள் மின் இணைப்பு எண்.9 மட்டும் 1–ம் பிரதிவாதி பெயரில் L.R.No.AAO/RD/TVL.F Name Transfer / D.No.189/2013–2014, நாள் 11.11.2013–ல் மாற்றம் செய்துள்ளதாக தபால் அனுப்பியுள்ளார். மின் இணைப்பு எண்.9 மட்டும் மின் மோட்டார், பம்பு செட் இவைகளில் பாதி மட்டும் கிரையம் பெற்றுள்ள 1–ம் பிரதிவாதி, வாதிகளுக்கு எவ்வித அறிவிப்போ உத்தரவின் நகலும் அனுப்பாமல் செய்த பெயர் மாற்றம் சட்டப்படி செல்லா மற்றும் இல்லாநிலை உடையதாகும். 4–ம் பிரதிவாதி அனுப்பிய பதில் மூலம் ஜூன் 2016–ல் தான் மேற்படி பெயர் மாற்றம் வாதிகளுக்கு தெரியவந்துள்ளது.

1.3) தாவா முதல் அயிட்ட சொத்து மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த பின், 2016 ஏப்ரல் மாதம் 1–ம் பிரதிவாதி அவரது தனிப்பட்ட நிலமான கிளாப்பாளையம் புல எண்.22/3–ல் ஆழ்துளை கிணறு அமைத்து இரவு பகலாக 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் அனுமதி 2 முதல் 5 பிரதிவாதிகளிடம் பெற்றுவிட்டதாகக் கூறி, வாதிகளை பொது கிணற்றில் மின் இணைப்பு மூலம் தண்ணீர் இறைக்கவிடாமல் இடையூறு செய்துள்ளார். இந்த விபரம் தெரிந்து 2 முதல் 5 பிரதிவாதிகளிடம் கடந்த 20.06.2016–ம் தேதி விசாரணை செய்ததில்

1–ம் பிரதிவாதிக்கு 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் அனுமதி கொடுக்கவில்லை என்ற விபரம் வாதிகளுக்கு தெரியவந்து, கடந்த 30.06.2016–ல் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளனர். 1–ம் பிரதிவாதி சர்வே எண்.22/3–ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு அனுமதியில்லாமல் 2 முதல் 5 பிரதிவாதிகளின் ஆதரவுடன் அனுபவிப்பதால், வாதிகளால் சர்வே எண்.20/2ல் உள்ள பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

1.4) மேலும் தாவா 2–ம் அயிட்ட சொத்தில் வாதிகளும், அவரது மூதாதையர்களும் கடந்த 28 வருடங்களாக எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருகின்றனர். தாவா 2ம் அயிட்ட சொத்தான வண்டித்தடத்தில் வாதிகளின் அமைதியான சுவாதீனத்தை 1–ம் பிரதிவாதி கடந்த 24.07.2016–ம் தேதி அவரது ஆட்களுடன் சேர்ந்து வந்து இடையூறு செய்ததை வாதிகள் தடுத்துவிட்டனர். ஆகவே தாவா 1–ம் அயிட்ட சொத்து 1–ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட உத்தரவு செல்லாநிலை உடையது என்று விளம்புகை பரிகாரமும், அதில் 2 முதல் 5 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதியின் பெயரை நீக்க வேண்டி செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், தாவா 2ம் அயிட்ட சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீனத்தை 1–ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

**2. <u>4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையையே 2, 3 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தமதாக ஏற்றுக்கொள்ளும் எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

2.1) தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். அதில் மின் இணைப்பு எண். 191–012–9 ஆனது, கடந்த 19.07.1980–ல் ஒரு சின்னாகவுண்டர் என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி மின் இணைப்புக்கு பின்னிட்டு மின்சார வாரிய

வருவாய் பிரிவானது 3 முறை இடமாற்றம் செய்யப்பட்டதால், மேற்படி மின் இணைப்பு எண்ணிற்குண்டான அசல் ஆய்வறிக்கையானது 2 முதல் 5 பிரதிவாதிகள் அலுவலகத்தில் இல்லை. கடந்த 07.05.2007-ம் தேதியில் மேற்படி சின்னாகவுண்டரின் வாரிசுகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள். மேற்படி மின் இணைப்பு எண்ணானது 2 முதல் 5 பிரதிவாதிகள் அலுவலக பதிவேட்டிலும், கணிணியிலும், சின்னாகவுண்டர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சின்னாக்கவுண்டர் கடந்த 11.06.2009-ம் தேதி இறந்ததற்கு பின்னிட்டு, அவரது வாரிசுகளிடம் தடையில்லா சான்று பெற்று தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளுக்குட்பட்டு, உரிய ஆவணங்களைப் பெற்று, 1-ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தாவா மின் இணைப்பை பொறுத்து வாதியின் அனுபவத்தில் இல்லாததால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதிகள் தாவா மின் இணைப்பு தங்களுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் கோராததாலும் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளார்.

3. **வழக்குரை, எதிர்வழக்குரையின், அடிப்படையில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:-**

1. Whether the plaintiffs are entitled to get relief of declaration that the order passed in L.R.No.220/RD,TVL.K, Name Transfer/D.No.189/2013/2014 dated 11.11.2013 as null and void?
2. Whether the plaintiffs are entitled to get relief of (b) permanent injunction?
3. Whether the plaintiffs are entitled to get relief of declaration in respect of suit cart track the 2$^{nd}$ item of property?
4. Whether the plaintiff are entitled to get relief of (d) permanent injunction?
5. To what other relief entitled?

**4. <u>வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம்:</u>**

4.1) வாதிகள் தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 மற்றும் நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் மணிகண்டன் என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4.2) வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 13 ஆவணங்களும் நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 02.09.1988 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆவண எண்.1779/1988–ன் அசலை வா.சா.ஆ.1 ஆகவும், 23.02.2004 ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஆவணம் ஆவண எண்.698/2004–ன் அசலை வா.சா.ஆ.2 ஆகவும், 10.02.2015 ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஆவண எண்.894/2015–ன் அசலை வா.சா.ஆ.3 ஆகவும், 07.05.2007–ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் ஆவண எண்.2856/2007–ன் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.4 ஆகவும், 20.06.2016 ம் தேதியிட்ட பொது தகவல் அலுவலர் செயற்பொறியாளர் திருச்செங்கோடு அவர்கள் வாதிக்கு கொடுத்த அறிவிப்பின் சார்வு நகலை வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4.3) மேலும் வாதிகள் தரப்பில் 30.06.2016 ம் தேதியிட்ட வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலை வா.சா.ஆ.6 ஆகவும், 4 ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட பிரிக்கப்படாத உறையின் அசலை வா.சா.ஆ.7 ஆகவும், 06.07.2017 ம் தேதியிட்ட அறிவிப்பு மற்றும் இ.ம.எண்.369/2016 இன் அ.வ.எண்.166/2016 மனு நகல், உத்தரவின் நகலை வா.சா.ஆ.8 ஆகவும், 10.07.2017 ம் தேதியிட்ட முதன்மை மின்பொறியாளர் ஈரோடு அவர்களின் பதில் கடிதத்தின் அசலை வா.சா.ஆ.9 ஆகவும், 16.08.2017 ம் தேதியிட்ட வாதிகள்

வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலை வா.சா.ஆ.10 ஆகவும், 1ம் பிரதிவாதி பெயரில் பெறப்பட்டுள்ள அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை வா.சா.ஆ.11 ஆகவும், 2 முதல் 4 மற்றும் முதன்மை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்கள் பெயர்களில் பெறப்பட்டுள்ள அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் (எண்ணிக்கை–5) அசலை வா.சா.ஆ.12 ஆகவும், 23.08.2017ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பின் அசலை வா.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4.4) மேலும் வாதி தரப்பில் 28.12.2016ம் தேதியிட்ட வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு 11.11.2013 LR.No.AAO/RD.TVL.F Name Transfer/D.No.189/2013–2014 நாள் 11.11.2013 அசல் ஒப்புவிக்கும்படி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 12 விதி 18ன் படி கொடுத்த குறிப்பறிக்கையின் அசலை நீ.ம.சா.ஆ.1 ஆகவும், 19.12.2016ம் தேதியிட்ட வாதிகள் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 12 விதி 8ன் படி 1ம் பிரதிவாதி தரப்பில் பெயர் மாற்றம் கேட்டு அனுப்பிய மனுவுடன் ஒப்புவித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி கொடுத்த குறிப்பறிக்கையின் அசலை நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. வழக்குரை, எதிர்வழக்குரை, இருதரப்பு சாட்சிகள், இருதரப்பு சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

6. <u>**எழுவினா 1–ற்கான தீர்வு:**</u>–

6.1) வாதிகளுக்கு தாவா 1–ம்அயிட்ட சொத்தானது வா.சா.ஆ.1, பாகப்பிரிவினை பத்திரப்படி பாத்தியமாகும். வா.சா.ஆ.1–னின் படி தாவா 1–ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு சரிபாதி பாக பாத்திய உரிமையாகும். வா.சா.ஆ.1 ஆனது 1–ம் வாதியின் மாமனார், 1–ம் வாதியின் கணவர் மற்றும்

அவர் சகோதரர் ராஜவேல் மற்றும் ஒரு சின்னாகவுண்டருக்குமிடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு 1-ம் வாதியின் மாமனார் மற்றும் ராஜவேல் கடந்த 23.02.2004-ம் தேதிய வா.சா.ஆ.2, பாகபாத்திய விடுதலை பத்திரம் மூலம் தங்களுக்குள்ள உரிமைகளை 1-ம் வாதியின் கணவருக்கு விடுதலை செய்து கொடுத்துள்ளனர். அதன் பின்னிட்டு 1-ம் வாதியின் மாமியார் பாவாயி கடந்த 10.02.2015-ல் வா.சா.ஆ.3, பாகபாத்திய விடுதலைப் பத்திரம் மூலம் தனக்குரிய உரிமையை விடுதலை செய்து வாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் மூலம் வாதிகள் தாவா 1-ம் அயிட்ட சொத்தின் சரிபாதி பாக பாத்திய உரிமை பெற்றவர்கள் ஆவர். தாவா 1-ம் அயிட்ட சொத்தை பொறுத்து சின்னாகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை 1-ம் பிரதிவாதி கடந்த 07.05.2007-ம் தேதி சரிபாதி பாகத்தை வா.சா.ஆ.4 மூலம் கிரையம் பெற்றுள்ளார். இந்நிலையில், 1-ம் பிரதிவாதி தாவா 1-ம் அயிட்ட சொத்துக்களில் வாதிளின் அனுபவத்தை இடையூறு செய்ய முயற்சித்துள்ளார். அப்போது 1-ம் பிரதிவாதி தாவா 1-ம் அயிட்ட சொத்திலுள்ள கிணற்றிற்குள்ள மின் இணைப்பை அவர் பெயருக்கு மாற்றிக்கொண்டுள்ளது வாதிகளுக்கு தெரிய வந்து, கடந்த 30.06.2016-ம் தேதி வா.சா.ஆ.6, வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பியுள்ளார். வா.சா.ஆ.6, அறிவிப்பை 4-ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டதற்கான பிரிக்கப்படாத உறை வா.சா.ஆ.7 ஆகும்.

6.2) இந்நிலையில் 1-ம் பிரதிவாதி, தாவா 1-ம் அயிட்ட சொத்தில் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த பின், 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட நிலம் அமைந்துள்ள கிளாப்பாளையம் புல எண்.22/3-ல் ஆழ்துளை கிணறு அமைத்து 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் 2 முதல் 5 பிரதிவாதிகளிடம் பெற்றதாகக் கூறி தாவா 1-ம்அயிட்ட சொத்தில் அமைந்துள்ள பொதுக்கிணற்றில் மின் இணைப்பு மூலம் தண்ணீர் இறைத்ததால், கடந்த 16.08.2017ம் தேதி வா.சா.ஆ.10, வழக்கறிஞர் அறிவிப்பை 3-ம் பிரதிவாதிக்கு அனுப்பி மற்ற பிரதிவாதிகளுக்கு நகல் அனுப்பிள்ளார். வா.சா.ஆ.10, அறிவிப்பை 1-ம்

பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.11 ஆகவும், 2 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் வா,.சா.ஆ.12 ஆகவும், வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10, அறிவிப்பிற்கு கடந்த 20.06.2016–ம் தேதி 2–ம் பிரதிவாதி வா.சா.ஆ.5, மூலம் அறிவிப்பு அனுப்பி 'சேஞ்ச் ஓவர்' சுவிட்சிற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் 2–ம் பிரதிவாதி வா.சா.ஆ.13, பதில் அறிவிப்பு மூலம் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்துள்ளார். ஆகவே தாவா 1–ம் அயிட்ட சொத்தில் உள்ள கிணற்றிற்கான மின் இணைப்பு எண்.9–ற்கு, 1–ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்தது செல்லாநிலையுடையது என்று விளம்புகை பரிகாரமும், தாவா 2–ம் அயிட்ட சொத்தான வண்டித்தடம் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளனர்.

6.3) தாவா 1–ம் அயிட்ட சொத்திலுள்ள கிணற்றிற்கான மின் இணைப்பு எண்.9–ஐ 1–ம் பிரதிவாதி பெயரில் 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயர் மாற்றம் செய்தது சட்டப்படி செல்லா மற்றும் இல்லாநிலை உடையது என்று வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே எழுவினா 1–ல் தீர்வு காணப்படவேண்டிய ஒன்றாகும். தாவா 1–ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு சரிபாதி பாக பாத்தியம் உள்ளது என்று வாதிகள் சொல்லும் கூற்றை நிரூபணம் செய்துள்ளார்களா? என்பதை பார்க்கவேண்டும். தாவா 1–ம் அயிட்ட சொத்து அமைந்துள்ளது கிளாப்பாளையம் கிராமம் சர்வே எண்.20/2 ஆகும். வா.சா.ஆ.1, பாகப்பிரிவினை பத்திரமானது கடந்த 02.09.1988–ல் 1–ம் வாதியின் மாமனார் முத்துசாமி, 1–ம் வாதியின் கணவர் சண்முகம் மற்றும் அவரது சகோதரர் ராஜவேல் மற்றும் ஒரு சின்னாகவுண்டருக்குமிடையில் ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.1, பாகப்பிரிவினை பத்திரத்தை இந்த நீதிமன்றம் பரிசீலித்ததில், 1–ம் வாதியின் மாமனார் முத்துசாமி, 1–ம் வாதியின் கணவர் சண்முகம் மற்றும் அவரது சகோதரர்

ராஜவேல் ஆகியோருக்கு 'B' ஜாபிதா சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து அறிய முடிகிறது. மேலும் மேற்படி சின்னாகவுண்டருக்கு 'A' ஜாபிதா சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து அறிய முடிகிறது. மேற்படி 'A' ஜாபிதா மற்றும் 'B' ஜாபிதா சொத்துக்களில் கிளாப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.20/3–ல் உள்ள தாவா 1–ம் அயிட்ட சொத்தான கிணறு பேர்பாதி பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. ஆகவே வா.சா.ஆ.1–ஐ இந்த நீதிமன்றம் பரிசீலித்ததிலிருந்து, தாவா 1–ம் அயிட்ட சொத்தில் 1–ம் வாதியின் மாமனார் முத்துசாமி, 1–ம் வாதியின் கணவர் சண்முகம், அவரது சகோதரர் ராஜவேல் மற்றும் ஒரு சின்னாகவுண்டருக்கு சரிபாக பாத்தியம் என்பது நிரூபணமாகிறது. வா.சா.ஆ.1–ஐ பொறுத்து தரப்பினர்களிடையே எவ்வித சர்ச்சையும் இல்லையென்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

6.4) வா.சா.ஆ.2, பாகபாத்திய விடுதலை பத்திரம் மூலம் 1–ம் வாதியின் மாமனார் முத்துசாமி மற்றும் ராஜவேல் தாவா 1–ம் அயிட்ட சொத்தில் தங்களுக்குள்ள உரிமையினை விட்டுக்கொடுத்து எழுதிக்கொடுத்துள்ளனர் என்பதை மேற்படி வா.சா.ஆ.2–ஐ இந்த நீதிமன்றம் பரிசீலித்ததிலிருந்து அறிய முடிகிறது. வா.சா.ஆ.3, பாகபாத்திய விடுதலை பத்திரம் மூலம் 1–ம் வாதியின் மாமியார் பாவாயி, தாவா 1–ம் அயிட்ட சொத்தில் தனது உரிமையை வாதிகளுக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்று மேற்படி வா.சா.ஆ.3–ஐ இந்த நீதிமன்றம் பரிசீலித்ததிலிருந்து அறிய முடிகிறது. மேற்படி வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களைப் பொறுத்தும் தரப்பினர்களிடையே எவ்வித சர்ச்சையும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் மூலம் தாவா 1–ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கு சரிபாதி பாக பாத்திய உரிமை உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அவை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் மூலம் வாதிகளால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.5) இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி மேற்படி சின்னாகவுண்டரிடமிருந்து கடந்த 07.05.2007 ம் தேதி வா.சா.ஆ.4, கிரைய ஆவணம் மூலம் சின்னாகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அதாவது தாவா 1–ம் அயிட்ட சொத்தில் சரிபாதி பாக உரிமையை கிரையம் பெற்றுள்ளார் என்பது மேற்படி வா.சா.ஆ.4, கிரைய ஆவணத்தை இந்த நீதிமன்றம் பரிசீலித்ததிலிருந்து அறிய முடிகிறது. ஆகவே வா.சா.ஆ.4, கிரைய ஆவணம் மூலம் 1–ம் பிரதிவாதிக்கு, தாவா 1–ம் அயிட்ட சொத்தில் சரிபாதி பாக உரிமையுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வா.சா.ஆ.4, மூலம் தாவா 1–ம் அயிட்ட சொத்தில், 1–ம் பிரதிவாதிக்கு சரிபாதி பாக பாத்திய உரிமையுண்டு என்று நிரூபணமும் செய்யப்பட்டுள்ளது. ஆகவே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையுள்ள ஆவணங்கள் மூலம் வாதிகளுக்கு தாவா 1–ம் அயிட்ட சொத்தில் சரிபாதி பாக பாத்தியமும், வா.சா.ஆ.4 மூலம் தாவா 1–ம் அயிட்ட சொத்தில், 1–ம் பிரதிவாதிக்கு சரிபாதி பாக பாத்தியமும் உள்ளது என்று வாதிகளால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

6.6) இந்நிலையில், தாவா 1–ம் அயிட்ட சொத்தில் சரிபாதி பாக பாத்தியமுடைய 1 ம் பிரதிவாதி, 2 முதல் 5 பிரதிவாதிகளின் உதவியுடன் அதன் மின் இணைப்பை தனது பெயருக்கு L.R.No.AAO/RD/TVL.F Name Transfer/ D.No.189/2013–2014, நாள் 11.11.2013 ன் படி பெயர் மாற்றம் செய்துள்ளதாக வா.சா.ஆ.6, வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தாவா 1–ம் அயிட்ட சொத்திலுள்ள கிணற்றிற்கான மின் இணைப்பை 1–ம் பிரதிவாதி தனது பெயரில் பெயர் மாற்றம் செய்து, 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலமான கிளாப்பாளையம் கிராமம் புல எண்.22/3–ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் அனுமதியை 2 முதல் 5 பிரதிவாதிகளிடம் பெற்று நீர் இறைப்பதாகவும் வாதிகளால் பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.10, வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாவா 1 ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் சரிபாதி பாகம் உண்டு

என்பதை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திருச்செங்கோடு வட்டத்தில் உதவி பொறியாளராக பணிபுரியும் பி.சா.1, தனது வாய்மொழி சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் தாவா 1–ம் அயிட்ட சொத்தில் உள்ள கிணற்றிற்கான மின் இணைப்பு எண்.9 சின்னாகவுண்டர் பெயரிலிருந்ததென்றும், அவர் இறந்ததற்கு பின்னிட்டு, அவரது வாரிசுகளிடம் தடையில்லா சான்று பெற்று, தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளுக்குட்பட்டு, உரிய ஆவணங்களைப் பெற்று, 1–ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக 2 முதல் 5 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளனர்.

6.7) தாவா 1–ம் அயிட்ட சொத்து மேற்படி சின்னாக்கவுண்டர் பெயரில் இருந்ததற்கான ஆவணங்களும், மின் இணைப்பு எண்.9–ஐ 1–ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்காக, 3–ம் பிரதிவாதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களும் வாதிகள் தரப்பில் நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 அறிவிப்பு மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க பிரதிவாதிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2 முதல் 5 பிரதிவாதிகள் தாவா 1–ம் அயிட்ட சொத்து சின்னாக்கவுண்டர், பெயரில் இருந்ததை தான் அவர் இறந்த பின்னிட்டு, அவரது வாரிசுகளிடம் தடையில்லா சான்று பெற்று 1–ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டது என்பது தொடர்பாக ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. மேலும் பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில், மின் இணைப்பு எண்.9–ல் 1–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.4, கிரைய ஆவணப்படி பொதுவில் பேர்பாதி கிரையம் பெற்றதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். பி.சா.1 மேலும் தனது வாய்மொழி சாட்சியத்தில் 1–ம் பிரதிவாதி பெயரில் மின் இணைப்பு எண்.9 தொடர்பாக பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் சான்றாவணமாக தாக்கல் செய்யவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

6.8) ஆகவே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்கள் மூலம் வாதிகளுக்கும், வா.சா.ஆ.4, கிரைய ஆவணம் மூலம் 1–ம் பிரதிவாதிக்கும் தாவா 1–ம் அயிட்ட சொத்தில் சரிபாதி பாக உரிமை உள்ளது என்பதை வாதிகள் தக்க சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளனர் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் கூற்றுப்படி, தாவா 1–ம் அயிட்ட சொத்திலுள்ள மின் இணைப்பு எண்.9 முழுவதும் சின்னாகவுண்டர் பெயரில் இருந்தது தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் அவர் இறந்த பின்னிட்டு, சின்னாகவுண்டரின் வாரிசுகளின் தடையில்லா சான்று பெற்று மின் இணைப்பு எண்.9–ஐ முழுவதுமாக 1–ம் பிரதிவாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததாக சொல்லப்படும் கூற்று ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.9) மேலும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் அலுவலகங்கள் மின் இணைப்பு எண்.9–ன் பெயர் மாற்றத்திற்காக, 1–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை முறையாக பரிசீலிக்காமல், 1–ம் பிரதிவாதி பெயருக்கு மேற்படி மின் இணைப்பு எண்.9–ல் வாதிகளுக்குள்ள சரிபாதி பங்கையும் சேர்த்து முழுவதுமாக பெயர் மாற்றம் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதிகள் தங்களது தரப்பு சான்றாவணங்கள் மூலம் தாவா 1–ம் அயிட்ட சொத்தில், தங்களுக்கு சரி பாதி பாக உரிமையிருந்ததன் அடிப்படையிலேயே இ.ம.எண்.369/2016 இன் அ.வ.எண்.167/2016–ஆன இந்த வழக்கில் வா.சா.ஆ.8, இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே தாவா 1–ம் அயிட்ட சொத்தில் வாதிகளுக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் சரிபாதி பாக உரிமையிருப்பதால், அதிலுள்ள மின் இணைப்பு எண்.9–ஐ முழுவதுமாக 1–ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் செய்து, 3–ம் பிரதிவாதி அலுவலகத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவான L.R.No.AAO/RD/TVL.F Name Transfer / D.No.189/2013–2014, நாள் 11.11.2013 சட்டப்படி செல்லா மற்றும் இல்லாநிலையுடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே வாதி

கோரும் விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதன் தொடர்ச்சியாக தாவா 1–ம் அயிட்ட சொத்தில் உள்ள மின் இணைப்பை பழையபடி சின்னாகவுண்டர் பெயரிலேயே 2 முதல் 5 பிரதிவாதிகள் மாற்றம் செய்யக்கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்து, இந்த எழுவினா 1–ற்கு தீர்வு காண்கிறது.

7. <u>**எழுவினா 2–ற்கான தீர்வு**</u>:–

7.1) தாவா 1–ம் அயிட்ட சொத்திலுள்ள மின் இணைப்பை பயன்படுத்தி 1–ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட நிலமான கிளாப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.22/3–ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் மூலம் நீர் இறைக்கக்கூடாது என்று வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பார்க்கவேண்டும். வாதிகள் ஏற்கனவே 1–ம் பிரதிவாதி மேற்படி 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் மூலம் தாவா 1–ம் அயிட்ட சொத்திலுள்ள மின் இணைப்பை பயன்படுத்துவது சம்மந்தமாக வா.சா.ஆ.10, வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளார். அதை பிரதிவாதிகள் வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 மூலம் பெற்றுக்கொண்டுள்ளனர். 2–ம் பிரதிவாதி கடந்த 20.06.2016–ம் தேதி வா.சா.ஆ.5, அறிவிப்பு மூலம் மின் இணைப்பு எண்.9–ல் 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் அலுவலகத்தில் இல்லையென்றும், கடந்த 23.08.2017–ம் தேதி வா.சா.ஆ.13, பதில் அறிவிப்பு மூலம் மேற்படி 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் 1ம் பிரதிவாதி பயன்படுத்தியது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

7.2) மேற்படி வா.சா.ஆ.5, வா.சா.ஆ.13 ஆவணங்களை இந்த நீதிமன்றம் பரிசீலித்ததில் தாவா 1ம் அயிட்ட சொத்திலுள்ள மின் இணைப்பு

எண். 9–ற்கு 'சேஞ்ச் ஓவர்' சுவிட்ச் அனுமதி 2–ம் பிரதிவாதி அலுவலகத்தால் வழங்கப்படவில்லை என்பது ஊர்ஜிதமாகிறது. ஆகவே 1–ம் பிரதிவாதி தாவா 1–ம் அயிட்ட சொத்து மின் இணைப்பு மூலம் கிளாப்பாளையம் கிராமம், புல எண்.22/3–ல் உள்ள ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் எடுக்க உபயோகப்படுத்தக்கூடாதென வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இந்த எழுவினா 2–ற்கு தீர்வு காண்கிறது.

8. **எழுவினா 3–ற்கான தீர்வு:–**

8.1) தாவா 2–ம் அயிட்ட சொத்தில் வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதே எழுவினா 3–ற்கு தீர்வு காணவேண்டிய ஒன்றாகும். தாவா 2–வது அயிட்ட சொத்தானது ஒரு வண்டிப்பாதையாகும். மேற்படி வண்டிப்பாதை கிளாப்பாளையம் கிராமம், சர்வே எண்.22/2 என்ற எண்ணில் கிழபுற ஓரமாய் வரும் 19 லிங்க்ஸ் அகலமுள்ள தென்வடல் தடத்தில் வாதிகள் பாகப்பத்திரப்படி ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு வண்டி வாகனம் சென்று வர பாத்தியம் உள்ளது என்று தாவாவில் சொல்லப்பட்டுள்ளது. தாவா 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதையில் வாதிகளுக்கு பாத்தியம் உள்ளது என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பார்க்கவேண்டும். வா.சா.ஆ.1, பாகப்பிரிவினை பத்திரத்தை இந்த நீதிமன்றம் பரிசீலித்ததில் அதில் கண்டுள்ள 'பொது ஷராவிலேயே' மேற்படி 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதை கண்டு எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1–ல் பொது ஷராவில் "கிளாப்பாளையம் போகும் இட்டேரியிலிருந்து நேர் தெற்கே சர்வே எண்.22/2 நெம்பரில் கிழபுறம் ஓரமாயுள்ள தடத்திலும், இதன் தொடர்ச்சியாய் சர்வே எண்.22/3 நெம்பரில் கிழபுறம் ஓரமாய் வரும் 19 லிங்ஸ் அகலமுள்ள தென்வடல் தடத்தில் AB ஜாப்தாக்காரர்கள் வண்டி கால்நடை ட்ராக்டர், லாரி முதலிய வாகனாதிகள் போய்வர ஓட்டிக்கொள்ளும் பாத்தியமும், போய்வர வழிநடை பாத்தியமும்" என்று தாவா 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதை

கண்டு எழுதப்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ.1, பாகப்பிரிவினை பத்திரம் மூலம் நிரூபணமாகிறது.

8.2) ஆகவே வாதிகள் தங்களது தாவாவில் குறிப்பிட்டுள்ள 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதையில் தங்களுக்குரிய பாத்தியத்தை நிரூபணம் செய்துள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்படி வண்டிப்பாதை வாதிகளுக்கு வா.சா.ஆ.1–ன் படி வழங்கப்பட்ட உரிமை ஆகும். ஆகவே தாவா 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதை வாதிகளுக்கு வழங்கப்பட்ட உரிமையாதலால், வாதிகளின் வீடு, விவசாய நிலங்களுக்கு வண்டி கால்நடை, வாகனாதிகள் எடுத்து செல்ல வாதிகளுக்கு உரிமையுள்ளது என்று வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்து இந்த எழுவினா 3–ற்கு தீர்வு காண்கிறது.

9. **<u>எழுவினா 4–ற்கான தீர்வு:–</u>**

வாதிகள் தங்களது தாவாவில் சொல்லியுள்ள 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதையில் தங்களுக்குள்ள பாத்தியத்தை வா.சா.ஆ.1 மூலம் நிரூபணம் செய்துள்ளதால், தாவா 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதையில் வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 3–ற்கு தீர்வு காணப்பட்டுள்ளதால் அதன் தொடர்ச்சியாக மேற்படி வண்டிப்பாதையில் வாதிகளின் அமைதியான சுவாதீனத்தை 1ம் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்ற வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் எழுவினா 4–ற்கு தீர்வு காண்கிறது.

10. <u>எழுவினா 5–ற்கான தீர்வு:–</u>

மேலே கூறிய எழுவினா 1 முதல் 4–ன் தீர்வை தவிர வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என்று எழுவினா 5–ற்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,** வழக்கு கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.

1. 1ம் அயிட்ட சொத்தான மின் இணைப்பு எண்.9–ஐ, 1–ம் பிரதிவாதியின் பெயருக்கு முழுமையாக மாற்றம் செய்யப்பட்ட 11.11.2013–ம் தேதியிட்ட 2 முதல் 5 பிரதிவாதிகளின் உத்தரவு சட்டப்படி செல்லாதது மற்றும் இல்லாநிலையுடையது என்று விளம்புகை பரிகாரம் பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. மேற்படி மின் இணைப்பை பழையபடி சின்னாகவுண்டர் பெயருக்கு மாற்றம் செய்யப்படவேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. தாவா 1–ம் அயிட்ட சொத்து மின் இணைப்பு மூலம் புல எண்.22/3–ல் உள்ள ஆழ்துளை கிணற்றில் 1–ம் பிரதிவாதி தண்ணீர் எடுக்க உபயோகிக்கக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

4. வழக்கு 2–ம் அயிட்ட சொத்தான வண்டிப்பாதை உரிமை வாதிகளுக்கு பாத்தியமுள்ளது என்று விளம்புகை பரிகாரம் பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

5. தாவா 2-ம் அயிட்ட வண்டிப்பாதையில் வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

6 தரப்பினர்கள் அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் என்னுடைய மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்பு பகரப்பட்டது.

A SARANYA

Digitally signed by A SARANYA
Date: 2023.02.20 16:37:44 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருச்செங்கோடு.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 ராஜம்மாள் (வாதி)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

பி.சா.1 – மணிகண்டன்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.09.1988 | பாகப்பிரிவினை பத்திரம் ஆவண எண்.1779/1988 | அசல் |
| வா.சா.ஆ.2 | 23.02.2004 | பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஆவணம் ஆவண எண்.698/2004 | அசல் |
| வா.சா.ஆ.3 | 10.02.2015 | பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஆவண எண்.894/2015 | அசல் |
| வா.சா.ஆ.4 | 07.05.2007 | 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணம் ஆவண எண்.2856/2007 | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 20.06.2016 | பொது தகவல் அலுவலர் செயற்பொறியாளர் திருச்செங்கோடு அவர்கள் வாதிக்கு கொடுத்த அறிவிப்பு | சார்வு நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.6 | 30.06.2016 | வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 | -- | 4 ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட பிரிக்கப்படாத உறை | அசல் |
| வா.சா.ஆ.8 | 06.07.2017 | அறிவிப்பு மற்றும் இ.ம.எண்.369/2016 இன் அ.வ.எண்.166/2016 மனு நகல், உத்தரவு | நகல் |
| வா.சா.ஆ.9 | 10.07.2017 | முதன்மை மின்பொறியாளர் ஈரோடு அவர்களின் பதில் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.10 | 16.08.2017 | வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ 11 | -- | 1 ம் பிரதிவாதி பெயரில் பெறப்பட்டுள்ள அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.12 | -- | 2 முதல் 4 மற்றும் முதன்மை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்கள் பெயர்களில் பெறப்பட்டுள்ள அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் எண்ணிக்கை-5 | அசல் |
| வா.சா.ஆ.13 | 23.08.2017 | 2 ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு | அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 28.12.2016 | வாதிகள் 1 ம் பிரதிவாதிக்கு 11.11.2013 LR.No.AAO/RD.TVL.F Name Transfer/D.No.189/2013-2014 நாள் 11.11.2013 அசல் ஒப்புவிக்கும்படி சிபிசி ஆர்டர் 12 ரூல் 18 ன் படி கொடுத்த குறிப்பறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | 19.12.2016 | வாதிகள் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சிபிசி கட்டளை 12 விதி 8 ன் படி 1 ம் பிரதிவாதி தரப்பில் பெயர் மாற்றம் கேட்டு அனுப்பிய மனுவுடன் ஒப்புவித்த ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி கொடுத்த குறிப்பறிக்கை | அசல் |

A SARANYA

Digitally signed by A SARANYA
Date: 2023.02.20 16:37:56 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருச்செங்கோடு.**

**தீர்ப்புரை/அசல்/ வரைவு**

அ.வ.எண்.167/2016

நாள்: 20.02.2023